C.C.//214/2016

PW – 1

பெயர்: கண்ணம்மாள்

தேதி: 13.03.2026.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஆஜர் எதிரி ஏழுவேலின் சகோதரி மகள் என்றால் சரிதான். எனக்கு கையெழுத்துபோட தெரியாது. முதல் விசாரணையில் சொன்னது போன்று தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். காயப்பட்டவுடன் உடனடியாக காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. 108 ஆம்புலன்ஸ் தான் வந்து கூட்டி சென்றது. சம்பவ காலம் வரை பயிரிடுவது, அழிம்பு செய்வது இடப்பிரச்சினை சம்பந்தமாக தொடர்ந்து எங்களுக்குள் தாவா இருந்து வந்தது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு எதிரி இடத்தை வேறு ஒரு நபருக்கு அடமானம் கொடுத்து விட்டு சென்று விட்டார் என்றால் அடமானம் கொடுத்து 3 வருடம் ஆகிறது. தற்போது வரை அடமானம் கொடுத்த நபர் தான் பயிர் செய்து வருகிறார். சம்பவத்திற்கு பின்பும் அடமானம் கொடுத்த பின்பும் எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் அடமானம் கொடுத்த பின்பு எந்த பிரச்சினையும் இல்லை. சம்பவ காலத்தில் எங்கள் இருவர் இடத்திற்கும் இடையே முள்கம்பி வேலி இருந்தது என்றால் சரிதான்.

சம்பவம் நடக்கும்போது நான் சட்டை போட்டிருந்தேனா என்றால் ஆமாம். சட்டையில் ரத்தம் படிந்திருந்ததா என்றால் ஆமாம். சட்டை கிழிந்திருந்ததா என்றால் இரண்டு காயம் பட்ட இடத்திலும் சட்டை கிழிந்திருந்தது. அந்த சட்டையை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் மருத்துவமனையில் போலிசார் பார்த்து சென்றார்கள். சம்பவத்தின் போது எதிரியை மட்டையால் தாக்க ஆக்ரோசமாக வந்த போது தடுமாறி கீழே விழுந்ததில் முள்வேலிகம்பி பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. முள்கம்பி கூர்மையில் பட்டு எனக்கு சட்டை கிழிந்து உடலிலும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சட்டையை சாட்சியம் ஆக்கினால் முள்கம்பி பட்டு காயம் ஏற்பட்டது துலங்கி விடும் என்பதால் தான் சட்டை மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னையோ, என் அம்மாவையோ எதிரி தாக்கவில்லை என்றால் சரியல்ல. என்னையோ, என் அம்மாவையோ எதிரி ஏசவோ, பேசவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல. நானும், என் தாயாரும் எதிரே நிற்பது ஆணாக இருந்தாலும்,

பெண்ணாக இருந்தாலும் எதிர்த்து தாக்கும் குணமும், வலிமையும் உடையவர்கள் என்றால் சரியல்ல. எதிரி உடல்பலத்தாலும், பண பலத்தாலும், ஆள் பலத்தாலும் எங்களை விட குறைந்தவர்கள் என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி என்னை அரிவாளால் வெட்டி காயம் படுத்தியதாக சொல்வதும், அசா.2 ஐ தாக்கியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் அசா.ஆ.1 புகார் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. பிரச்சினை வருகிறது என்றால் அந்த இடத்தை விட்டு விலகி செல்லும் பண்பு கொண்டவர் எதிரி என்றாலும் அதனால்தான் அந்த வயலை பயிர் இட்டால் என்னுடன் சச்சரவு வந்து கொண்டு இருக்கிறது என்று தான் வேறு ஒருநபருக்கு அடைமானம் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை நானும், என் மகளும் தாக்கி காயப்படுத்தியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சிசிஎண் 1/2026 என இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் சொல்லப்பட்ட குற்ற சம்பவம் எதிலும் எதிரி ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்குள் உள்ள இடத்து பகையை பயன்படுத்தி எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக முள்வேலி பட்டு ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi